# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2166/9 - 2020 මාර්තු මස 10 වැනි අඟහරුවාදා - 2020.03.10

*2166/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டலஸ் அலஹப்பெரும,
கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
2020, பெப்புருவரி 28.

கட்டளை

1. 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட விளையாட்டுக்கள் கட்டளையில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின் தெரிவாளர் குழுவினை நியமனஞ் செய்வதற்கான முறைமையை நீக்கி மற்றும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் இலக்கம் 7 இன் (XIV) ஆம் விடயத்தை நீக்கி திருத்தம் செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலக்கம் 7 (XIV) (அ), (ஆ) மற்றும் (இ) ஆம் விடயங்களை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களை பதிலீடு செய்வதன் வாயிலாக,



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலக்கம் 7 (XIV)

(அ) சங்கத்தின் பதவிதாங்குநர் தேர்தலின் வாயிலாக நிறைவேற்றுக் குழு நியமனஞ் செய்யப்பட்டவுடன் நிறைவேற்றுக் குழுவின் வாயிலாக, தொழில்நுட்பக் குழுவின், நிதிக் குழுவின், ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினர்களை அமைப்பு விதியில் குறிப்பிட்ட பதவிக் காலத்திற்குத் தெரிவுசெய்து கொள்ளுவதன் பொருட்டு அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து இணைப்பமைப்புக்களை அறிவுறுத்தி வேட்புமனுக்கள் கோரப்பட்டு தகைமைகளின் அடிப்படையில் நியமித்துக் கொள்ளுதல்.

(ஆ) ஏற்புடைய தேசிய சங்கத்தின் தெரிவிக் குழுவின் பொருட்டு உறுப்பினர்கள் 05 பேரை நியமனஞ் செய்துகொள்ள வேண்டியதுடன் இது தொடர்பாக அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து இணைப்பமைப்புக்களை அறிவுறுத்தி வேட்புமனுக்கள் கோரப்பட்டு நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் போது மிகப் பொருத்தமான உறுப்பினர்கள் 05 பேரினைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டியதுடன் தெரிவுசெய்து கொள்ளப்பட்ட தெரிவுக்குழுவின் ஆவணம் ஒன்றினை பணிப்பாளர் நாயகத்திற்கும் பிரதியொன்றுடன் தேசிய தெரிவுக் குழுவிற்கும் அனுப்பி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். யாதேனும் காரணத்தினால் தேசிய தெரிவுக் குழுவால் அத்தெரிவுக் குழு அனுமதியளிக்கப்படாவிடின் மீண்டும் வேட்புமனுக்களைக் கோரி தேசிய தெரிவுக் குழுவிற்கு அனுமதியின் பொருட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவுக் குழுவினை நியமனஞ் செய்யும் உத்தியோகபூர்வ காலம் ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கத்தின் அமைப்புவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ காலத்திற்கு சமனாவதுடன் உறுப்பினர் ஒருவர்/ உறுப்பினர்கள் விலகினால் மீள நியமனஞ் செய்யப்படுதலானது மேற்குறிப்பிட்ட குழு நியமிக்கப்பட்டவாறே ஆதல் வேண்டும்.

2. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் இலக்கம் 7 இன் (XV) ஆம் விடயத்தை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

(XV) முந்திய ஆண்டு தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளில் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருப்பின் அவற்றுடன் ஆண்டறிக்கையினையும் தனது ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தின் போது அல்லது விசேட பொதுச்சபைக் கூட்டத்தின் போது சபையில் சமர்ப்பித்தல்.

3. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் இலக்கம் 5(4) (ஐ), (எ) இன் கீழ் காணப்படும் கட்டளைகளை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைகளைப் பதிலீடு செய்வதன் வாயிலாக.

(எ) விளையாட்டுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எழுதப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டிருக்கும் மற்றும் விளையாட்டுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளதென தேசிய சங்கம், விளையாட்டு அமைச்சின் அல்லது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஒழுங்கான சபையொன்றின் வாயிலாக நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் வாயிலாக குற்றவாளியாகிய யாதேனும் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் பதவிதாங்குநராக, நிறைவேற்றுக் குழு உறுப்பினராகி இருப்பின்,

(ஐ) ஏற்புடைய விளையாட்டுக்களின் தேசிய குழாத்தின், தேசிய அணியின், தேசிய மட்டத்தில் நிகழ்கால விளையாட்டு வீரனொருவனின்/வீராங்கனையின் பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகள் ஆகின் அல்லது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திற்கு முன்னரான ஒரு வருட காலத்தினுள் விளையாட்டு வீரனொருவனாக செயற்பட்டிருப்பின் அல்லது நிகழ்கால விளையாட்டு வீரனொருவனின்,

4. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளைகளை திருத்தம் செய்து 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதிய 2128/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் திருத்த இலக்கம் (02) 5. (4) (ந) ஆம் பிரிவினை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவினைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

5. (4) (ந)

I. விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியான நிதியாண்டு முடிவடைந்து 02 மாதத்தினுள் நிறைவேற்றுக் குழுவால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றினைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்குத் தவறிய அல்லது அவ்வாறு செய்வதனை தவிர்த்துள்ள தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் தலைவர், செயலாளர், பொருளாளர்

அல்லது காசோலையில் கையொப்பமிடும் அல்லது அது தொடர்பாக பொறுப்புக் கூறக்கூடிய வேறொரு பதவிதாங்குநர் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினாலோ அல்லது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினாலோ அல்லது விளையாட்டு அமைச்சினாலோ அல்லது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினாலோ நியமிக்கப்பட்ட ஒழுங்கான ஆய்வுச் சபையொன்றினால் நடாத்தப்படும் ஆய்வுகளில் குற்றவாளியாகின்,

II. கணக்காய்வாளர் நாயகத்திடம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதத்தினுள் அல்லது பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கைகள் தொடர்பாக முறைகேடான நிதிப் பயன்பாடு அல்லது நிதி மோசடியொன்று இடம்பெற்றுள்ளதாக ஒழுங்கான சபையொன்றினால் நடாத்தப்படும் ஆய்வுகளில் குற்றவாளியாகும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராகின்,

ஒழுங்கான சபை எனப்படுவது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தின் போது அல்லது விசேட பொதுச்சபைக் கூட்டத்தின் போது அல்லது நிறைவேற்றுக் குழுவின் வாயிலாக அல்லது சங்கத்தின் ஒழுக்காற்றுக் குழுவினால் அல்லது அவ்வாறு இல்லாவிடின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது விளையாட்டு அமைச்சு அல்லது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் சபையெனக் கருதப்படும்.

III. நிறைவேற்றுக் குழுவினால் உறுதிப்படுத்தப்படும் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து 02 மாதத்தினுள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்காத தேசிய விளையாட்டுச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் அல்லது காசோலையில் கையொப்பமிடும் வேறொரு பதவிதாங்குநர் எனின் ஆய்வொன்று நடாத்தப்பட்டு குற்றவாளித் தீர்ப்பு செய்யப்படும் வரையில் அவர்களுக்குப் பதவியாளர் தேர்தல் இடம்பெறும் எதிர்நோக்கிய வருடத்தின் பொருட்டு பதவிகள் தொடர்பாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் இயலுமை இல்லாதொழியும்.

5. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் இலக்கம் 7 இன் (XVII) ஆம் பிரிவு மற்றும் அதில் திருத்தமாக 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலக்கம் 7 (இ) இல் திருத்தப்பட்ட பிரிவினை நீக்கி திருத்தமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2128/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் (01) 7 (XVII) ஆம் விடயத்தின் (அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவுகளை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

(அ) தேசிய சங்கமொன்றின் பதவியாளர் தேர்தலினை மேற்கொள்ளுவதற்கு ஆகக்குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் பதவிதாங்குநர்களாக தெரிவுசெய்து கொள்ளப்படுவதற்குப் பொருத்தமான பதவிதாங்குநர்களின் பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைகள் பதவியாளர் தேர்தல் குழுவால் நிறைவுறுத்தப்பட்டு நிராகரிக்கப்படும் வேட்புமனுக்கள் மற்றும் நிராகரிக்கப்படுவதற்கான காரணத்தினையும் குறிப்பிட்டு இணைப்பமைப்புக்களுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்கினை அளிப்பதற்கு உரிமை கொண்ட இணைப்பமைப்புக்களின் வாக்காளர் பெயர்ப்பட்டியலையும், முந்திய நிதியாண்டில் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்கு அறிக்கையின் பிரதியொன்றினை அந்நிதியாண்டிற்கு ஏற்புடைய தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் உறுதிப்படுத்தி அதன் பிரதியொன்றினையும் உள்ளடக்கிய அறிவித்தலொன்றை ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் அதன் இணைப்பமைப்புக்களுக்குச் சமர்ப்பித்தல்.

(இ) ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் இடம்பெறுவதற்கு முந்திய ஆண்டின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கணக்காய்வின் பொருட்டு நிதியாண்டு முடிவடைந்து 02 மாதத்தினுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மற்றும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பதவியாளர் தேர்தல் இடம்பெறும் 14 நாட்களுக்கு முன்னர் தமது உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கு கணக்காய்வு முடிவுறுத்தப்பட்டு கிடைக்கப்பெறாதிருப்பின், பதவியாளர் தேர்தல் மற்றும் ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தினைக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காது நடாத்தப்பட இயலுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட உடனேயே கணக்காய்வு செய்யப்பட்ட அந்நிதி அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பனவற்றிற்குப் பொறுப்புக்கூறக்கூடிய, நிதியாண்டிற்குரிய ஏற்புடைய தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் உறுதிப்படுத்தி விசேட பொதுச்சபைக் கூட்டத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர்

நிகழ்கால நிறைவேற்றுக் குழுவினால் ஏற்புடைய இணைப்பமைப்புக்களுக்குச் சமர்ப்பித்து ஏற்புடைய நிதியாண்டிற்குரிய தலைவர், செயலாளர், பொருளாளரும் நிகழ்கால நிறைவேற்றுக் குழுவும் பங்குபற்றும் விசேட பொதுச்சபைக் கூட்டத்தின் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படல் இடம்பெறல் வேண்டும்.

6. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விளையாட்டுச் சங்கக் கட்டளைகளின் இலக்கம் 05(4) (ண) ஆம் பந்தியினை நீக்கி 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட (4) (ஈ) இனை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

பொருளாளர் அல்லது உதவிப் பொருளாளரினைத் தவிர அச்சங்கத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள, முன்னெடுக்கப்பட்ட, அமுல்ப்படுத்தப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள யாதேனும் பிரதான விளையாட்டுப் போட்டித் தொடரொன்றின் போது, விளையாட்டு விழாவின் போது அல்லது போட்டியின் போது அவ் ஏற்புடைய விளையாட்டு தொடர்பாக, குழு விளையாட்டொன்று தொடர்பாக இரண்டு தடவைகளுக்கு மேற்பட்ட தடவைகள் அல்லது யாதேனும் தனி நிகழ்ச்சியொன்று தொடர்பாக அல்லது விளையாட்டொன்று தொடர்பாக ஒரு தடவைக்கு மேலதிகமான தடவைகள் தொடர்பாக விளையாட்டு வீரனாகப் பங்குபற்றியிராவிடின் அல்லது விளையாட்டு வீரனொருவனாக இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிராவிடின் மற்றும் அது தொடர்பாக ஏற்புடையதாகும் விதமாக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திராவிடின்,

7. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விளையாட்டுச் சங்கக் கட்டளைகளில் இலக்கம் 05(4) (ந) ஆம் பிரிவினை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவினைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

(ந) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை ஒன்றின் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் உறுப்பினராக இருப்பின் அல்லது அவ்வாறு நியமனம் பெறின்,

அவ்வாறாயினும், அந்நபர் ஏற்புடைய சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் விளையாட்டினால் விளையாட்டு வீரனொருவனாக இலங்கையை அல்லது இணைந்த விளையாட்டுக் கழகத்தை அல்லது ஒழுங்கமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருப்பின் அல்லது விளையாட்டு அமைச்சினாலோ அல்லது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினாலோ பதிவுசெய்யப்பட்டுள்ள, நடாத்தப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள யாதேனும் பிரதான போட்டித் தொடரிற்கு அல்லது போட்டியொன்றிற்கு விளையாட்டு வீரனொருவனாகப் பங்குபற்றியிருப்பின் மற்றும் அது தொடர்பாக ஏற்புடைய விதத்தில் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவரெனில் அவர் தகைமையற்றவர் ஆதல் கூடாது.

8. 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2089/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 08(2) ஆம் கட்டளையினை நீக்கி திருத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 2137/86 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளில் இலக்கம் 1. 08(2) திருத்தப்பட்ட கட்டளையினை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளையினைப் பதிலீடு செய்வதன வாயிலாக,

8. (2) விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் பதவியாளர் தேர்தல் குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானமொன்று தொடர்பிலான மேன்முறையீடொன்றினை அமைச்சரிடம் சமர்ப்பித்தலானது, அப்பதவியாளர் தேர்தல் குழுவால் தீர்மானம் வழங்கப்பட்ட தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அமைச்சரினால் அம்மேன்முறையீடு கவனத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு ஆலோசனைச் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறான மேன்முறையீடுகள் தொடர்பாக மேன்முறையீட்டு ஆலோசனைச் சபை தனது விதப்புரையினை, மீளாய்வின் பொருட்டு பெற்றுக்கொண்ட அம்மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்த தினத்திலிருந்து ஒரு கிழமையினுள் (07 நாட்களுள்) எழுத்துமூலமாக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) தேசிய சங்கமொன்றின் நிதி தொடர்பான அல்லது நிறைவேற்றுக் குழுவின் நியமனம் தொடர்பான மேன்முறையீடுகளை எந்தவொரு வேளையிலும் அமைச்சரிடம் சமர்ப்பிக்க முடியும்.

(இ) ஏனைய சகல மேன்முறையீடுகளையும் (பதவியாளர் தேர்தலுடன் தொடர்புடைய மேன்முறையீடுகள் மற்றும் மேலே (ஆ) ஆம் பிரிவின் மேன்முறையீடுகளைத் தவிர) அத்தேசிய சங்கத்தின் வாயிலாக வழங்கப்பட்ட தீர்மானம் அல்லது எடுக்கப்பட்ட செயற்பாடு அல்லது இடம்பெற்ற தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் மேன்முறையீட்டினை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) விளையாட்டு வீர, வீராங்கனைகளைத் தெரிவுசெய்தல் தவிர்ந்த ஏனைய சகல மேன்முறையீடுகள் தொடர்பாக வைப்பாக ரூ. 5000.00 பணமானது விளையாட்டு அமைச்சின் சிறாப்பர் இலாகாவில் கொடுப்பனவினை மேற்கொண்டு கொடுப்பனவுச் சிட்டையின் பிரதியொன்றினை ஏற்புடைய மேன்முறையீட்டுடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். மேன்முறையீட்டின் பிரகாரம் அவர் நிரபராதியாகவோ அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபனை நிரூபணம் ஆகின் மாத்திரம் அப்பணமானது மீள கொடுப்பனவு செய்யப்படும்.

(உ) விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படும் சகல மேன்முறையீடுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் அமைச்சரினால் நியமனஞ் செய்யப்படும் மேன்றையீட்டு ஆலோசனைச் சபையானது, உயர் நீதிமன்றத்தின்/மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளையோ அல்லது ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்களையோ கொண்ட மூன்று நபர்கள் அடங்கிய குழுவாக இருத்தல் வேண்டும்.

*9. 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 அந் திகதிய 2089/56 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் இலக்கம் 3 (ஊ)* விடயத்தை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயத்தைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

(ஊ) 7 (xiv) (ஈ) ஆம் ஒழுங்குவிதியின் பிரகாரம் மேற்படி குழுவினை நியமனஞ் செய்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பதவியாளர் தேர்தல் குழுவால் வாக்காளர் (வாக்குரிமை கொண்ட இணைப்பமைப்புக்களுக்கு) பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளை முடிவுறுத்தி தேசிய விளையாட்டுச் சங்கத்தின் சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். பதவியாளர் தேர்தல் இடம்பெறும் தினத்திற்கு ஆகக்குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் பதவிதாங்குநர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்குப் பொருத்தமான பதவிதாங்குநர்களின் பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளை பதவியாளர் தேர்தல் குழுவால் முடிவுறுத்தப்பட்டு வாக்குரிமை கொண்ட இணைப்பமைப்புக்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*10. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆண்டின் 01 ஆம் இலக்க விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் III ஆம் உப பகுதியின் தேசிய விளையாட்டுச் சங்கங்களின்* அமைப்பு விதிகளுக்கு ஏற்புடைய கட்டளைகளின் கீழ் (ஓ) மற்றும் (ச) ஆம் விடயங்களை நீக்கி கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பதிலீடு செய்வதன் வாயிலாக,

(ஓ) ஒவ்வொரு நபரும் பிரயோகிப்பதற்கு உரித்துடைய வாக்குகளின் எண்ணிக்கைகளை விசேடமாகக் குறித்துரைத்து அவ்வாறான வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் போது வருகை தந்து வாக்கினை அளிப்பதற்குத் தகைமைகொண்ட உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலொன்றைத் தமது உறுப்பினர் இணைப்பமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புக்களுக்கு வருடாந்தம் பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது 55 நாட்களுக்கு முன்னர் வழங்குதல்.

(ச) வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் போது தமது வாக்கினை அளிப்பதன் பொருட்டு இணைப்பமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் அல்லது வேறு ஒழுங்கமைப்புக்களால் பெயர் குறிப்பிடப்படும் நபர்களின் பெயர்கள் பொதுச்சபைக் கூட்டத்திற்கு/பதவிதாங்குநர் தேர்தலுக்கு ஆகக்குறைந்தது 40 நாட்களுக்கு முன்னராவது தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு தெரிவித்தல் வேண்டும் என்பதாக கட்டளைகளை ஒழுங்கமைத்தல்.

*11. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் (xxi) ஆம் விடயமாவது கீழ்வருமாறு* திருத்தப்படல் வேண்டும்.

(xxi) ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு சட்ட ரீதியாக ஒழுங்கமைத்துக் கொள்ளப்பட்ட பெறுகை வழிகாட்டியொன்று இல்லாத சந்தர்ப்பங்களின் போது பெறுகை மற்றும் கேள்வி அறிவித்தல் தொடர்பாக அரசாங்கத்தின் தராதரமான பெறுகை நடைமுறைகளைக் கடைப்பிடித்தல்.

*03-926*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.